பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 24 செவ்வாய்க்கிழமை 09.09.2025 கதிர் 303

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழர்களின் ஜெனீவா திருவிழா நேற்றுத் தொடங்கியது. இந்தத் திருவிழாவை முன்வைத்து தமிழ்க் கட்சிகளும்சிலதரப்புக்களும்காவடிகள் தூக்கியபோதும் அவற்றின்

# ஐ.நா. திரட்டிய ஆதாரங்களைப் பயன்படுத்தி பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தவேண்டும்

### உறுப்பு நாடுகளுக்கு உயராணையர் அழைப்பு



இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள், மனித உரிமைகளின் மீறல்கள், மனிதாபிமானத்திற்கு எதிரானகுற்றங்கள்தொடர்பில்ஐக்கிய நாடுகள்மனிதஉரிமைகள்பேரவையால் திரட்டப்பட்டுள்ள ஆதாரங்கள் மற்றும் தகவல்களைப் பயன்படுத்தி சர்வதேச நியாயாதிக்கத்தின் ஊடாக இலங்கையில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த உறுப்பு நாடுகள் முன்வரவேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் வோல்க்கர் டர்க் தெரிவித்தார்.

“இலங்கை தொடர்பில் எமது அலுவலகத்தினால்முன்னெடுக்கப்பட்டுவரும் பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தின் ஊடாக இலங்கையின் கடந்தகால மீறல்கள் தொடர்பில் 105,000 ஆதாரங்கள் மற்றும் தகவல்கள் திரட்டப்பட்டிருக்கின்றன. சர்வதேச நியாயாதிக்கத்தின் ஊடாக இவற்றைப் பயன்படுத்திபொறுப்புக்கூறலை

# மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துங்கள்

### இந்தியா வலியுறுத்து

நாட்டின் அரசமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துதல், மாகாணசபைத்தேர்தல்களைஉடனடியாகநடத்துதல் மற்றும் அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை மேற்கொள்ளல் என்பவற்றுக்கு நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் வலியுறுத்தியது இந்தியா.

சகலரையும் உள்ளடக்கிய அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு மற்றும் நியாயமான நல்லிணக்க செயன்முறை என்பன நிலையானஅமைதிக்குவழிகோலும்எனவும்சுட்டிக்காட்டியது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் நேற்று திங்கட்கிழமை ஜெனீவாவில் ஆரம்பமானது. தொடக்க அமர்வில் இலங்கை தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய இந்தியப் பிரதிநிதி, 2009 ஆம் ஆண்டுஇலங்கையில்போர்முடிவுக்குக்கொண்டுவரப்பட்டதன் பின்னர் நாட்டைக் மீளக்கட்டியெழுப்புவதற்கும், மக்களை மீள்குடியமர்த்துவதற்கும் இந்தியா தொடர்ந்து ஆதரவு வழங்கிவந்தது என்றார்.

அதேபோன்று 2022ஆம் ஆண்டு இலங்கை மிகத் தீவிர பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருந்த வேளையில் இந்தியாவினால் வழங்கப்பட்ட உதவிகள் தொடர்பிலும் நினைவுகூர்ந்தார்,

# இங்கையின் உள்ளக பொறிமுறைக்கு பாக், லாவோஸ், எரித்ரியா ஆதரவு

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையானது பக்கச்சார்பின்றிநியாயத்துவத்தின்அடிப்படையில் செயற்படவேண்டும்எனபேரவையில் வலியுறுத்திய பாகிஸ்தான், லாவோஸ்,



எரித்ரியா உள்ளிட்ட நாடுகளின் பிரதிநிதிகள், இலங்கையின் உள்ளக செயன்முறைகளைத் தாம் ஆதரிப்பதாகவும் அறிவித்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடர் நேற்று ஜெனீவாவில் தொடங்கியது. உயராணையர் வோல்கர் டோர்க்கினால் இலங்கை தொடர்பான அறிக்கை முதல் அமர்விலேயே சமர்ப்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அறிக்கை மீதான விவாதம் நடைபெற்றது.

அங்கு கருத்து வெளியிட்ட லாவோஸ், பாகிஸ்தான், எரித்ரியா உள்ளிட்ட நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கைக்கு ஆதரவாகக் கருத்துரைத்தனர். கடந்த கூட்டத்தொடரில்

# உண்மை, நீதி, பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படவேண்டும்

### நியூஸி, ஆஸி, சுவிஸ் நாடுகள் வலியுறுத்து

இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவரும் மனிதப்புதைகுழி அகழ்வு நடவடிக்கைகள் சர்வதேச நியமங்களுக்கு ஏற்றவாறு அமையவேண்டும் எனவும், தனிநபர்களை இலக்குவைப்பதற்குப் பயன்படுத்தப்படும் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும்எனவும்நியூஸிலாந்து, சுவிட்ஸர்லாந்து, அவுஸ்திரேலியா உள்ளிட்ட பேரவையின் உறுப்புநாடுகள் வலியுறுத்தியுள்ளன.

# மனிதப் புதைகுழிகளின் அகழ்வுப் பணி சர்வதேச நியமப்படி இருக்க வேண்டும்

### இலங்கை இணை அனுசரணை நாடுகள் வலியுறுத்து

மனிதப்புதைகுழிஅகழ்வுநடவடிக்கைகள் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக முன்னெடுக்கப்படவேண்டும் என்றும், சுயாதீன வழக்குத்தொடுநர் அலுவலகம் நிறுவப்படவேண்டும் என்று பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகள்ஐ.நா. மனிதஉரிமைகள்பேரவையில் சுட்டிக்காட்டியுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் நேற்று ஜெனீவாவில் தொடங்கியது. ஐ.நா. மனித உரிமைகள் உயராணையர் வோல்கர் டர்க் இலங்கையின் மனித உரிமைகள்நிலவரம்தொடர்பில்முன்வைத்த அறிக்கையின் உள்ளடக்கம் மீது விவாதம் இடம்பெற்றது. அதில் இலங்கையின் இணையனுசரணை நாடுகளான பிரிட்டன், கனடா, வட மெசிடோனியா, மொன்ரெனேக்ரோ மற்றும் மாலாவி ஆகிய நாடுகளின் சார்பில் கருத்துரைத்த பிரிட்டன் பிரதிநிதி கருத்துத் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் உயராணையர் வோல்கர் டர்க் அண்மையில் இலங்கைக்குச்சென்று திரும்பியமையைப் பெரிதும் வரவேற்கிறார் என்று அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில்கடந்தகாலங்களில்இடம்பெற்றசட்டவிரோத படுகொலைகள், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் உள்ளிட்ட அத்துமீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் அவற்றின் வடுக்கள் இன்னமும் தொடர்வதாகவும், அவர்கள் தொடர்ந்து துன்பத்தை அனுபவித்துவருகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# பொறுப்புக்கூறலே சட்டவாட்சியின் மையப்புள்ளி

### ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்து

வலிந்து காணாமலாக்கப்படல்கள் உள்ளடங்கலாகக் கடந்தகால மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதில் பின்னடைவுநிலை தொடர்வதாக ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அதிருப்தி வெளியிட்டுள்ள ஐரோப்பியஒன்றியம், பொறுப்புக்கூறலே சட்டவாட்சியின் மையப்புள்ளி எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் நேற்றுஜெனீவாவில்தொடங்கியது. அதில் இலங்கை தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி தெரிவித்ததாவது:

கடந்தகாலத்தின் தொடர்ச்சியை முடிவுக்குக்கொண்டுவருவதற்கான வாய்ப்பு தற்போது ஆளும்தரப்புக்கு கிட்டியிருக்கிறது. அதுமாத்திரமன்றி அவற்றை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும்,

# நீதியரசரின் வாகனத்தை வீடியோ எடுத்தவர் கைது

*பிரதம நீதியரசரின் வாகன அணிவகுப்பை கைப்பேசியில் வீடியோ எடுத்ததாகக் கூறப்படும் நபர், ஒருவர் கைது செய்யப்பட்டு செப்டெம்பர் 10 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்..*

*சந்தேகநபரை கறுவாத் தோட்டம் பொலிஸார் கைது செய்து, திங்கட்கிழமை கொழும்பு பிரதான நீதிவான் அசங்க எஸ். போதரகம முன் நிறுத்தினர்.*

*விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருவதாக பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்ததுடன், சந்தேகநபரின் அலைபேசியை அரச இரசாயனப் பகுப்பாய்வாளரிடம் அனுப்பி, அதுகுறித்த அறிக்கையைப் பெற அனுமதி கோரினர்.*

*சந்தேகநபரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, அவரது வாடிக்கையாளர் வாகன அணிவகுப்பை வீடியோ எடுத்ததற்காக மன்னிப்பு கேட்டுள்ளதாகவும், எனவே அவரை பிணையில் விடுதலை செய்ய வேண்டும் எனவும் கோரினார்.*

*ஆனால் சமர்ப்பணங்களை பரிசீலித்த நீதவான், சந்தேக நபரை 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதோடு, கைப்பேசியை அரச இரசாயன பகுப்பாய்வாளரிடம் அனுப்பி அறிக்கை பெறவும் உத்தரவிட்டார்.*

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

## இனி இது .....

நேர்த்திக்கடன்கள் நிறைவேறியதற்கான அறிகுறிகள் எவையும் நேற்றைய அமர்வில் தென்படவில்லை.

கூட்டத் தொடர் தொடங்கிய முதல் நாளான நேற்று இலங்கை தொடர்பான கடந்த இரண்டு வருட கால தனது அவதானிப்பை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயராணையர் வோல்கர் டர்க் முன்வைத்தார். அவரது அறிக்கையில் உள்ளது போன்றே, உள்நாட்டு விசாரணைப்பொறிமுறையையே அவர் தனது பேச்சிலும் ஆதரித்தார். அவரது அறிக்கை மீது விவாதமும் நடந்தது. அந்த விவாதத்தில் உரையாற்றிய நாடுகளின் பிரதிநிதிகளும் உள்நாட்டுப்பொறிமுறையையே ஆதரித்தனர்.

தமிழ்க்கட்சிகளும் தரப்புக்களும் சர்வதேச பொறிமுறையையே தொடர்ந்து விலியுறுத்தி வந்தனர். நீதிக்கான சர்வதேச நீதிமன்றம் (ICJ), சர்தேச குற்றவியல் நீதிமன்றம் (ICC), இலங்கையில் நிகழ்ந்த இனப்படுகொலையை மதிப்பீடு செய்யும் அதிகாரத்துடன் பன்னாட்டுச் சுயாதீன மற்றும் பாரபட்சமற்ற பொறிமுறை (IIIM) என்று உலகத்தில் உள்ள எல்லா சர்வதேச விசாரணைகளையும் வலியுறுத்தினார்கள். ஆனால், ஐ.நா. மனித உரிமைகள் உயராணையரோ விவாதத்தில் உரையாற்றிய நாடுகளின் பிரதிநிதிகளோ அத்தகைய எந்தவொரு விடயத்தையும் தமது உரைகளில் தொடக்கூட இல்லை.

வோல்கர் டர்க் மட்டும், ஐ.நா. மனித உரிமைகள் உயராணையர் அலுவலகம் இலங்கை தொடர்பில் திரட்டிவரும் ஆதாரங்கள் மற்றும் தகவல்களைக்கொண்டு இலங்கையை பொறுப்புக்கூறவைக்கும் செயற்பாடுகளை உறுப்பு நாடுகள் மேற்கொள்ளவேண்டும் என் கேட்டிருக்கிறார். தமிழர் தரப்பு இதை வேண்டுமானால் இலங்கையை நீதிக்கான சர்வதேச நீதிமன்றில் நிறுத்துவதற்கான அழைப்பு என்று எமது கட்சிகள் வியாக்கியானம் செய்யலாம். ஆனால், எமது ஆட்கள் கேட்டதோ இனப்படுகொலை இடம்பெற்றது அதற்கு இலங்கை அரசு (தனிநபர்கள் அல்லர்) பொறுப்பு என்ற வகையில் நீதிக்கான சர்வதேச நீதிமன்றிற்கு ஏதாவது ஒரு உறுப்பு நாடு இலங்கையை இழுத்துச் செல்லவேண்டும் என்பது. உயராணையர் தெரிவித்திருப்பதோ பொறுப்புக்கூறலிற்காக தம்மிடமுள்ள தகவல்களைப் பயன்படுத்தவேண்டும் என்பது. இரண்டும் இடையில் பெரிய இடைவெளி உண்டு.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்ல வகை செய்வதற்கு ஏற்றதாக இலங்கை ரோம் ஒப்பந்தத்தில் கையெழுத்திடவேண்டும் என்ற வலியுறுத்தல்கூட உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளது உரையில் பிரதிபலிக்கவில்லை. ஆகமொத்தத்தில் அடுத்து வரவுள்ள இலங்கை தொடர்பான தீர்மானத்திலும்கூட இலங்கைக்கு பெரும் அழுத்தம் தரக்கூடிய விடயங்களை எதிர்பார்க்க முடியாது என்பதே யதார்த்தம்.

அப்படியானால் கடிதங்கள், கையெழுத்துக்கள், போராட்டங்கள் எல்லாம்? இருக்கவே இருக்கிறதே மாகாண சபைத் தேர்தல். .

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஐ.நா. திரட்டிய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதிப்படுத்துவதற்கு உறுப்பு நாடுகள் முன்வரவேண்டும்“ என்று அவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் நேற்று ஜெனீவாவில் தொடங்கியது. கூட்டத்தொடரின் தொடக்கநாள் அமர்வில் ஜெனீவா நேரப்படி மதியம் 12.15 மணிக்கு (இலங்கை நேரப்படி பி.ப 3.45) உயராணையர் வோல்கர் டர்க் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான தனது எழுத்துமூல அறிக்கையின் உள்ளடக்கம் குறித்து உரையாற்றினார். அவர் தெரிவித்ததாவது:

இலங்கையில் கடந்தகால மீறல்கள் மற்றும் வன்முறைகளாலும், தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் போக்கினாலும் உருவான காயங்களை ஆற்றுவதற்கும், அவற்றிலிருந்து மீள்வதற்கும் இலங்கைக்கு தற்போது வரலாற்று முக்கியத்தும் மிக்க வாய்ப்பு கிட்டியிருக்கிறது. நீதியையும் பொறுப்புக்கூறலையும் உறுதிசெய்வதற்கான சந்தர்ப்பமும் அமைந்திருக்கிறது.

அண்மையில் தான் இலங்கைக்குச் சென்றிருந்தபோது முன்னெப்போதுமில்லாத வகையில் சீரான புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருப்பதாக ஆளும்தரப்பு வாக்குறுதியளித்திருந்தது எனவும், அந்த வாக்குறுதிகளுக்கு செயல்வடிவம் அளித்து அவை உரியவாறு நிறைவேற்றப்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

எதிர்வருங்காலங்களில் நாட்டில் நிலையான நல்லிணக்கத்தையும் அமைதியையும் கட்டியெழுப்புவதற்கு பொறுப்புக்கூறல் மற்றும் நீதி நிலைநாட்டப்படவேண்டியது அவசியம். இலங்கைக்கான எனது பயணத்தின்போது கடந்தகால மீறல்களால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னமும் துயரத்தையும், அத்துமீறல்களையும் அனுபவித்து வருகின்றமையை நேரில் அவதானிக்க முடிந்தது. செம்மணி மனிதப்புதைகுழியைப் பார்வையிடச்சென்றபோது அங்கிருந்தவர்கள் தாம் முகங்கொடுத்துவரும் துன்பத்தைத் என்னிடம் முறையிட்டனர். அதுமாத்திரமன்றி தெற்கைச்சேர்ந்த பெண்ணொருவர் தனது கணவருக்காக நீண்டகாலமாகக் காத்திருக்கிறார் என்று என்னிடம் கூறினார். எனவே தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் போக்கு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, நீதி வழங்கப்படவேண்டும்.

கடந்த காலங்களில் அரசு, பாதுகாப்புப் படையினர் மற்றும் ஆயுதக்குழுவான தமிழீழ விடுதலைப்புலிகள் உள்ளிட்ட தரப்பினரால் மீறல்கள், வன்முறைகள் நிகழ்த்தப்பட்டன என்ற விடயத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும்,

நினைவுகூரல்களில் ஈடுபடுவதற்கு இடமளிக்கப்பட்டிருப்பது சாதகமான விடயம். அதேநேரம் மீள்நிகழாமையை உறுதிப்படுத்துவதற்கு ஏதுவான வகையில் அவசியமான சட்ட மறுசீரமைப்புக்க்ள மேற்கொள்ளப்படவேண்டும். குறிப்பாக சுயாதீன வழக்குத்தொடுநர் அலுவலகத்தை நிறுவப் போவதாக ஆளும்தரப்பு அறிவித்திருப்பதை வரவேற்கும் அதேநேரம் அச்செயன்முறையில் சிவில் சமூகம் உள்ளடங்கலாக சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் உள்வாங்கப்படவேண்டும்.

வலியுறுத்திய அவர், கடந்த தசாப்தங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான வழக்குகளைக் கையாள்வதற்காக சுயாதீனமான விசேட சட்டவாதியின் பங்கேற்புடன்கூடிய பிரத்யேக நீதிப்பொறிமுறையை இலங்கை ஆளும்தரப்பு உருவாக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்துவதை உடன் இடைநிறுத்தவேண்டும். நிகழ்நிலைக் காப்புச் சட்டம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேசசமவாயச்சட்டம், அரச சார்பற்ற அமைப்புக்கள் தொடர்பான உத்தேச சட்ட வரைவு மற்றும் தனிநபர் தரவுப் பாதுகாப்பு தொடர்பான உத்தேச சட்ட வரைவு என்பன உள்ளடங்கலாக மீறல்களுக்கு வழிவகுக்கக்கூடிய சட்டங்கள் உரிய நியமங்களுக்கு அமைவாகத் திருத்தியமைக்கப்படவேண்டும்.

வலிந்து காணாமலாக்கப்படல்கள் மற்றும் காணி சுவீகரிப்பு உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பில் இயங்கிவரும் செயற்பாட்டாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினர் மீதான ஒடுக்குமுறைகளும், அச்சுறுத்தல்களும் தொடர்கின்றன. அவை உடனடியாக முடிவுக்குக்கொண்டுவரப்படவேண்டும்.

பாதுகாப்புத்துறை மறுசீரமைக் கப்படவேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவமயமாக்கம் முடிவுக்குக்கொண்டுவரப்படுவதுடன் தனியாருக்குச் சொந்தமான காணிகள் விடுவிக்கப்படவேண்டும். மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்.

இலங்கை தொடர்பில் எமது அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தின் ஊடாக இலங்கையின் கடந்தகால மீறல்கள் தொடர்பில் 105,000 ஆதாரங்கள் மற்றும் தகவல்கள் திரட்டப்பட்டிருக்கின்றன. சர்வதேச நியாயாதிக்கத்தின் ஊடாக இவற்றைப் பயன்படுத்தி பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கு உறுப்பு நாடுகள் முன்வரவேண்டும். மனிதப் புதைகுழிகளின் அகழ்வு நடவடிக்கைகளுக்கு அவசியமான உதவிகள் வழங்கப்படவேண்டும்- என்றார்.

## பொறுப்புக்கூறலே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கும் ஆளும்தரப்பு கொண்டிருக்கும் கடப்பாட்டுக்கு செயல்வடிவம் வழங்கப்படவேண்டும்.

நிலைமாறுகால நீதி நிலைநாட் டப்படவேண்டியதன் அவசியத்தை ஐரோப்பிய ஒன்றியம் உணர்கின்றது. ஆளும்தரப்பினால் நிறுவப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள சுயாதீன வழக்குத்தொடுநர் அலுவலக யோசனைகளை வரவேற்கின்றோம். இருப்பினும் வலிந்து காணாமலாக்கப்படல்கள் உள்ளடங்கலாகக் கடந்தகால மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதில் பின்னடைவுகள் காணப்படுவதையும் சுட்டிக்காட்டவேண்டியிருக்கிறது.

பயங்கரவாதத்தடைச்சட்டம் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டுவருகின்றது. அச்சட்டத்தைப் பதிலீடு செய்யும் வகையில் புதிதாக உருவாக்கப்படும் சட்டம் சர்வதேச நியமங்களுக்குஏற்றவாறு அமையவேண்டியது அவசியம். பொறுப்புக்கூறலே சட்டவாட்சியின் மையப்புள்ளியாக அமையும் என்றார்.

## உண்மை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் நேற்று திங்கட்கிழமை ஜெனீவாவில் தொடங்கியது. அதில் இலங்கை தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய நியூஸிலாந்து, சுவிட்ஸர்லாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் கருத்துத் தெரிவித்தபோது இதனை வலியுறுத்தின.

தேசிய நல்லிணக்கத்தையும், பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை உறுதிப்படுத்துவதற்கான உள்ளகக் கட்டமைப்புக்களின் இயலுமையையும் கட்டியெழுப்புவதில் இலங்கை ஆளும்தரப்புக் கொண்டிருக்கும் அர்ப்பணிப்புடன்கூடிய கடப்பாட்டைப் பெரிதும் வரவேற்பதாகத் தெரிவித்த ஜப்பான், வட-கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்டுவரும் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பில் பாராட்டியது.

அதேபோன்று நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் அறிவித்தது.

அதேபோன்று தாம் இலங்கையின் நீண்டகால நட்புறவு நாடாகத் திகழ்வதாகத் தெரிவித்த ஆஸ்திரேலியா, மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும், நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கும், நிலைமாறுகால நீதியை உறுதிசெய்வதற்கும் இலங்கையினால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டது.

நபர்களைத் தன்னிச்சையாகக் கைதுசெய்வதற்கும், தடுத்துவைப்பதற்கும் பயன்படுத்தப்படும் பயங்கரவாதத்தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் எனவும், நிகழ்நிலைக் காப்புச்சட்டம் திருத்தியமைக்கப்படவேண்டும் எனவும் வலியுறுத்தியது.

நியூஸிலாந்து, சுவிட்ஸர்லாந்து மற்றும் மொன்டெனேக்ரோ ஆகிய நாடுகள் இலங்கையில் உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பன உறுதிப்படுத்தப்படவேண்டியது அவசியம் எனவும், சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்படவேண்டும் எனவும் வலியுறுத்தின.

## இங்கையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றப்பட்ட 57/1 தீர்மானத்தை இலங்கை நிராகரித்திருந்தபோதிலும், ஐ.நா. மனித உரிமைகள் உயராணையரை இலங்கைக்கு அழைத்தமைக்கு இந்த நாடுகள் பாராட்டுத் தெரிவித்தன.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையானது பக்கச்சார்பின்றி நியாயத்துவத்தின் அடிப்படையில் செயற்படவேண்டும் என வலியுறுத்திய அந்நாடுகளின் பிரதிநிதிகள், இலங்கையின் உள்ளக செயன்முறைகளைத் தாம் ஆதரிக்கின்றன என்றும் அறிவித்தன.

அதேபோன்று ஐ.நா மனித உரிமைகள் உயராணையர் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்றிட்டம் சம்பந்தப்பட்ட நாட்டின் ஒப்புதலின்றி முன்னெடுக்கப்படுவதாகவும், இதற்காகச் செலவிடப்படும் நிதியை வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தமுடியும் எனவும் இந்த நாடுகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

## மனிதப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாதத்தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என வலியுறுத்திய அவர், நீண்டகாலமாகத் தொடரும் தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் போக்கை முடிவுக்குக்கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதையும் வலியுறுத்தினார்

அதுமாத்திரமன்றி நாட்டில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் மனிதப்புதைகுழி அகழ்வு நடவடிக்கைகள் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக முன்னெடுக்கப்படவேண்டும் என்றும், சுயாதீன வழக்குத்தொடுநர் அலுவலகம் நிறுவப்படவேண்டும் என்றும் பிரிட்டன் பிரதிநிதி வலியுறுத்தினார்.

# கிருஷாந்தி கொலையாளியின் கடிதம் அமைச்சர் பார்வைக்கு

கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில்மரணதண்டனைஅனுபவித்துவரும் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்சவின் மனைவியினால் கடந்த ஜூலை மாதம் தமக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதம் கிடைக்கப்பெற்றிருப்பதாகவும், அக்கடிதம் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டிருப்பதாகவும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் பிரத்யேக செயலாளர் அறிவித்துள்ளார்.

பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் நீதிமன்றத்தினால் பிரதான குற்றவாளியாகப் பெயரிடப்பட்டு கொலைத் தண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ச, அப்படுகொலை குறித்தும், செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் குறித்தும் தன்னிடம்கூறியவிடயங்களைஉள்ளடக்கியும், இவ்விவகாரம் தொடர்பில் மீண்டும் சுயாதீன விசாரணையைக் கோரியும் அவரது மனைவி எஸ்.சி.விஜேவிக்ரம 10.07.2025 எனும் திகதியிடப்பட்ட கடிதமொன்றை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அனுப்பிவைத்திருந்தார். அவற்றின் பிரதிகள் பிரதமர்ஹரினிஅமரசூரியமற்றும்நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

அக்கடிதத்தில் 7ஆம் இராணுவக் காலாட்படைத் தலைமையகத்தில் படுகொலை செய்யப்பட்டு செம்மணி சோதனைச்சாவடிக்குக் கொண்டுவரப்பட்ட கிருஷாந்தி குமாரசுவாமியினதும், அவரது குடும்பத்தினரினதும்சடலங்களைகப்டன்லலித் ஹேவாகேயின் ஆணைக்கு அமைவாகப் புதைத்ததைத்தவிரதனதுகணவர்வேறெந்தக் குற்றத்தையும் புரியவில்லை எனவும், செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்று முன்னெடுக்கப்படும் பட்சத்தில் அதில் சாட்சியமளிப்பதற்கு சோமரத்ன ராஜபக்ஷ தயாராகஇருப்பதாகவும்குறிப்பிடப்பட்டிருந்தது.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நீதியமைச்சர் ஆகியோருக்கு கடந்த ஜூலை மாதம் அனுப்பிவைக்கப்பட்ட இக்கடிதம் தொடர்பில் எந்தவொரு பதிலும் கிட்டாததன் காரணமாக, சோமரத்ன ராஜபக்ஷ அவரது மனைவியின் ஊடாக கடந்த வாரம் மீண்டும் ஜனாதிபதிக்கு மற்றுமொருகடிதத்தைஅனுப்பிவைத்திருந்தார்.

செம்மணி மனிதப்படுகொலை தொடர்பில் இதுவரையில் வெளிப்படுத்தாத விடயங்களை சகல ஊடகங்களுக்கும், சர்வதேச சமூகத்துக்கும், நீதித்துறைக்கும் வெளிப்படுத்துமாறு தனது கணவரான சோமரத்னராஜபக்ஷவழங்கியஆலோசனைக்கு அமைவாக அவ்வெளிப்படுத்தல்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவிருப்பதாக அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் 'மரணதண்டனை விதிக்கப்பட்ட இராணுவத்தினர் ஜனாதிபதியிடம் முன்வைக்கும் மேன்முறையீடு எனும் தலைப்பின்கீழ் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கு அனுப்பிவைக்கப்பட்ட 10.07.2025 எனும் திகதியிடப்பட்ட கடிதம் கிடைக்கப்பெற்றிருப்பதாகவும், அக்கடிதம் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் அறியத்தருகிறோம்' என அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின்பிரத்யேகசெயலாளர்லஹிரு சமரசிங்கவினால் அனுப்பிவைக்கப்பட்ட பதில் கடிதம் சோமரத்ன ராஜபக்ஷவின் மனைவி எஸ்.சி.விஜேவிக்ரமவுக்கு கடந்த வெள்ளிக்கிழமை கிடைக்கப்பெற்றுள்ளது.






காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரசியல் குற்றச்சாட்டுகளால் மறைக்கப்படும ஆபத்து

**இலங்கையில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட ஐஸ் (Methamphetamine) போதைப்பொருள் உற்பத்தி மையம் சமூகத்தில் பெரும் அதிர்வலைகளை எழுப்பியுள்ளது. இதன் வெளிப்பாடு, ஒருபுறம் நாட்டின் பாதுகாப்பு அமைப்புகள் எவ்வளவு குறைபாடுகளுடன் இயங்கி வருகின்றன என்பதை வெளிக்கொணர்கிறது. மறுபுறம், ஆளும்தரப்பும் எதிர்க்கட்சிகளும் அரசியல் குற்றச்சாட்டுகளை பரிமாறிக்கொள்வதற்கான புதிய கருவியாக இதனைப் பயன்படுத்திக் கொண்டிருப்பது மிகுந்த கவலையளிக்கிறது.**

**தற்போதைய ஆளும்தரப்பு, இந்தப் போதைப்பொருள் உற்பத்திமையம் நாட்டுக்குள் நிலைநிறுத்தப்படுவதற்கு முன்னைய ஆளும்தரப்புக்களின் கவனக் குறைபாடே காரணம் என்றும் கடந்த கால ஆட்சியாளர்களே இதற்கு ஆதரவளித்தார்கள் என்றும் குற்றஞ்சாட்டுகிறது. அதற்கு எதிராக எதிர்க் கட்சிகள், அந்த மையத்திற்குத் தேவையான மூலப் பொருள்கள் நாட்டுக்குள் நுழைந்த விதம் குறித்து கேள்வி எழுப்புகின்றன. குறிப்பாக, துறைமுகங்கள் வழியாக எவ்வாறு இத்தகைய ஆபத்தான வேதிப்பொருள்கள் சுலபமாக நாட்டுக்குள் வந்தன என்பதே அவர்களின் கேள்வி.**

**எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டிய 33 கொள்கலன்கள் சோதனையின்றி விடுவிக்கப்பட்டது குறித்த விவகாரம், இன்றைய ஆட்சியின் பொறுப்பின்மையை வெளிச்சமிடுகிறது. "கடந்த கால ஆட்சிகள் தவறுகளைச் செய்திருக்கலாம், ஆனால் தற்போதைய ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்த பின்னரும் ஏன் அதே குற்றவழிகள் தொடர்ந்தன?" என்ற கேள்விக்கு ஆளும்தரப்பினருக்கு விடை கூற இயலவில்லை.**

**இத்தகைய பரிமாற்ற குற்றச்சாட்டுகள், பிரச்சினையின் அடிப்படை காரணத்தை மறைக்கும் ஆபத்தை உருவாக்குகின்றன. போதைப்பொருள் உற்பத்தி மையம் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது ஒரு தனித்த சம்பவமல்ல; இது பல ஆண்டுகளாகக் கட்டுக்கோப்பாக வளர்ந்து வந்த சட்டவிரோத வலையமைப்பின் வெளிப்பாடு மட்டுமே. இதில் உள்ளூர் அரசியல், துறைமுக நிர்வாக அலட்சியம், காவல் மற்றும் சுங்க அதிகாரிகளின் ஊழல், சர்வதேச போதைப்பொருள் கும்பல்களுடன் உள்ள தொடர்புகள் ஆகியவை அனைத்தும் ஒன்றிணைந்து செயல்பட்டுள்ளன என்பதே உண்மை.**

**இலங்கை தற்போது சர்வதேச போதைப்பொருள் வரைபடத்தில் ஒரு முக்கிய இடத்தைப் பெறத் தொடங்கியுள்ளது என்பது உலக அமைப்புகளின் எச்சரிக்கை. இந்தியப் பெருங்கடலைச் சூழ்ந்துள்ள புவியியல் நிலைமையால் இலங்கை, போதைப்பொருள் கடத்தலுக்கான மைய இடமாக மாறியுள்ளது. இந்த ஆபத்தான நிலையை சரியாகக் கையாளாமல் அரசியல் குற்றச்சாட்டுகளில் நேரத்தை வீணடிப்பது, எதிர்கால தலைமுறைகளை நேரடியாக ஆபத்துக்குள் தள்ளுவதாகும்.**

**இதற்கு ஆளும்தரப்பு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் மிகவும் தெளிவானவை:**

**சுங்க மற்றும் துறைமுகங்களில் முழுமையான மின்னணு கண்காணிப்பு முறைமை (Electronic Scanning) கொண்டு வரப்பட வேண்டும்.**

**சோதனை இன்றி கொள்கலன்களை விடுவிக்கும் நடைமுறைகள் முற்றிலும் நிறுத்தப்பட வேண்டும்.**

**போதைப்பொருள் தொடர்பான விசாரணைகள் சுயாதீனமான புலனாய்வு பிரிவுகளுக்கு ஒப்படைக்கப்பட வேண்டும்; அரசியல் செல்வாக்கு தலையிடக் கூடாது.**

**சர்வதேச புலனாய்வு அமைப்புகளுடன் நெருங்கிய ஒத்துழைப்பு தேவைப்படுகிறது.**

**முக்கியமாக, இளைஞர்களை விழிப்புணர்வூட்டும் தேசிய திட்டம் அவசியம், ஏனெனில் சந்தை தேவை இருக்கும் வரை விநியோகமும் உற்பத்தியும் தொடரும்.**

**போதைப்பொருள் பிரச்சினை அரசியல் ஆயுதமாக அல்ல, தேசிய பாதுகாப்பு பிரச்சினையாக பார்க்கப்பட வேண்டும். ஒரு அரசாங்கம் மற்றொன்றை குற்றஞ்சாட்டுவது எளிது; ஆனால் இத்தகைய ஆபத்துகளை ஒழிக்க தொடர்ச்சியான, கடுமையான, வெளிப்படையான நடவடிக்கைகள் மட்டுமே தேவை.**

**இன்று அரசியல் கட்சிகள் "யார் குற்றவாளி?" என்ற கேள்வியில் சிக்கிக்கொண்டிருக்கின்றன. ஆனால் மக்களின் உண்மையான கேள்வி: "இனி எப்படித் தடுக்கப்போகிறீர்கள்?" என்பதுதான். அந்தக் கேள்விக்கான விடையைக் கொடுப்பதே இன்றைய ஆளும்தரப்பின் முதன்மைப் பொறுப்பு.**

**இலங்கை போதைப்பொருள் உற்பத்தி மற்றும் விநியோக மையமாக மாறிவிடுமானால், அது சமூகத்தையும் பொருளாதாரத்தையும் மட்டுமல்லாமல் நாட்டின் பன்னாட்டு மதிப்பையும் சிதைக்கக் கூடும். ஆகவே, குற்றச்சாட்டுகளைப் பரிமாறிக்கொள்ளாமல், செயலால் நிரூபிக்க வேண்டிய தருணம் இது.**

## ஒரு வழக்கு நடக்கக்கூடாத விதத்திற்கு நிமலராஜன் வழக்கு ஓர் எடுத்துக்காட்டு

### விசாரணை பற்றிய அறிக்கையில் தெரிவிப்பு

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் படுகொலை குறித்த வழக்கானது உண்மையில் ஒரு வழக்கு விசாரணை எவ்வாறு இடம்பெறக்கூடாதோ அதற்கு உதாரணமாகக் குறிப்பிடக்கூடிய விசாரணை சார்ந்த தோல்விகளைக்கொண்ட ஒரு வழக்காகும் என ரெட்ரெஸ் மற்றும் சர்வதேச உண்மைக்கும், நீதிக்குமான செயற்திட்டம் இணைந்து வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பி.பி.சி ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் படுகொலைகுறித்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் தோல்வி பற்றி சித்திரவதைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும், தப்பிப்பிழைத் தவர்களுக்கான நீதியைக் கோருவதற்குமான 'ரெட்ரெஸ்' அமைப்புடன் இணைந்து சர்வதேச உண்மைக்கும், நீதிக்குமான செயற்திட்டத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள 70 பக்க விரிவான அறிக்கை திங்கட்கிழமை (8)வெளியிடப்பட்டது.

'இலங்கையில் கால் நூற்றாண்டுக்கும் மேலாக ஊடகவியலாளர்களின் படுகொலைகளுடன் தொடர்புடையவர்கள் திட்டமிட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றனர். 2000 - 2010 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் உள்நாட்டுப்போர் குறித்து செய்தியறிக்கையிட்டுவந்த ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப்பணியாளர்களின் சுமார் 44 பேர் கொல்லப்பட்டனர். இருப்பினும் இன்றுவரை இப்படுகொலைகளுடன் தொடர்புடைய எந்தவொரு குற்றவாளியும் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவில்லை' என அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை இலங்கையில் தொடரும் இத்தகைய தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் போக்கானது, தமது உயிரைப் பயணம்வைத்து, சுயதணிக்கை செய்து அல்லது வேறு நாடுகளில் வாழும் இலங்கையைச்சேர்ந்த ஊடகவியலாளர்கள் மத்தியில் அச்சுறுத்தலை விளைவித்திருப்பதாக சர்வதேச உண்மைக்கும், நீதிக்குமான செயற்திட்டத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் யஸ்மின் சூக்கா விசனம் வெளியிட்டுள்ளார்.

அதேபோன்று ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் படுகொலை குறித்த வழக்கானது உண்மையில் ஒரு வழக்கு விசாரணை எவ்வாறு இடம்பெறக்கூடாதோ அதற்கு உதாரணமாகக் குறிப்பிடக்கூடிய விசாரணை சார்ந்த தோல்விகளைக்கொண்ட ஒரு வழக்காகும் என இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிமலராஜனின் கொலை இடம்பெற்ற இடம் ஒருபோதும் பாதுகாக்கப்பட்டு ஆவணப்படுத்தப்படவில்லை. படங்கள் எவையும் எடுக்கப்படவில்லை. தடயவியல் ஆதாரங்கள் எவையும் சேகரிக்கப்படவில்லை. சம்பவம் இடம்பெற்ற தினத்தன்று இரவு கடமையில் இருந்த சில பாதுகாப்புப்படையினரை விசாரிப்பதற்கே பல வருடங்கள் எடுத்தது. ஆனால், பலர் ஒருபோதும் அடையாளம் காணப்படவும் இல்லை. விசாரணைக்கு உட்படுத்தப்படவும் இல்லை என இவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## சர்ச்சைக் கொள்கலன்கள் குறித்து ஆளும்தரப்பு மூடிமறைக்கின்றது

### பொது ஜன பெரமுன செயலாளர் குற்றச்சாட்டு

*சர்ச்சைக்குரிய 323 கொள்கலன்கள் தொடர்பில் சர்வதேச புலனாய்வு பிரிவு இலங்கைக்கு அறிக்கை சமர்ப்பித்ததா இல்லையா என்பதை ஆளும்தரப்பு வெளிப்படுத்தவேண்டும். இந்தக் கொள்கலன் விவகாரத்தில் ஆளும்தரப்பு உண்மையை மூடி மறைக்கிறது என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.*

*ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் திங்கட்கிழமை (08) நடைபெற்ற ஊடகவியலாளர் குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,*

*போதைப்பொருள் விவகாரம் நாட்டின் தற்போதைய பிரச்சினையாக காணப்படுகிறது. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆட்சிக்கு வந்தவுடன் எவ்வித புதிய அபிவிருத்தி திட்டங்களும் ஆரம்பிக்கப்படவில்லையென்று குறிப்பிட்டோம்.*

*ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அரசாங்கம் நுவரெலியாவில் ஐஸ் போதைப்பொருள் உற்பத்தி கைத்தொழில்சாலையை ஆரம்பித்துள்ளது.*

*கெஹல்பத்தரே பத்ம என்ற நபர் அண்மையில் கைது செய்யப்பட்டார். பொலிஸ்மா அதிபர் உட்பட பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோர் இந்த கைதியை வரவேற்பதற்கு விமானநிலையத்துக்கு சென்றிருந்தார்கள்.*

*பாதாள குழு உறுப்பினர் கெஹல்பத்தரே பத்ம உள்ளிட்ட தரப்பினரை கைது செய்வதற்குரிய சிவப்பு பிடியாணையை இந்த அரசாங்கம் பிறப்பித்ததா அல்லது கடந்த அரசாங்கம் என்பதா என்பதை வெளிப்படுத்த வேண்டும். இந்த நபர்களை கைதுசெய்வதற்குரிய சர்வதேசமட்டத்திலான சகல பணிகளையும் கடந்த அரசாங்கமே மேற்கொண்டது.*

*அரச நிதி மோசடிக்கும் அரசியல்வாதிகளுக்கும் இடையில் தொடர்புள்ளதாக குறிப்பிடப்படுகிறது. குறுகிய அரசியல் நோக்கத்துக்காக சகல அரசியல்கட்சிகள் மீதும் இவ்வாறு குற்றச்சாட்ட கூடாது.*

*போதைப்பொருள் குற்றச்சாட்டில் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட நபர் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுடன் 2019ஆம் ஆண்டுக்கு பின்னர் செயற்பாட்டு ரீதியிலான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. ஆகவே கட்சியுடன் தொடர்பில்லாத நபரை வைத்து கட்சி மீது குற்றஞ்சாட்டுவது முறையற்றது.*

*சுங்கத்தில் இருந்து 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை பாரிய சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்த கொள்கலன்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அரசாங்கம் முறையாக பதிலளிக்கவில்லை. உண்மையை வெளிப்படுத்தவில்லை. பிரபாகரனின் ஆயுதங்கள் இந்த கொள்கலன்களில் அடங்கியிருந்ததாக பாராளுமன்றத்தில் பேசப்பட்டது.*

*இந்த கொள்கலன்கள் தொடர்பில் சர்வதேச புலனாய்வு பிரிவு இலங்கைக்கு அறிக்கை சமர்ப்பித்ததா இல்லையா என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும். இந்த கொள்கலன் விவகாரத்தில் அரசாங்கம் உண்மையை மூடி மறைக்கிறது என்றார்.*

## ஷாங்காய் உச்சி மாநாடு:

# ரஷ்ய –இந்திய – சீன முத்தரப்பு கூட்டணி! அமெரிக்காவிற்கு பெருஞ் சவாலா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா



(ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் அரச தலைவர்கள் குழுவின் 25வது உச்சி மாநாடு சீன ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்றது. இதன் முடிவில் ரஷ்ய –இந்திய – சீன முத்தரப்பு கூட்டணி உருவானது, அமெரிக்காவிற்கு பெருஞ் சவாலாக எழுந்துள்ளது)

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உலகின் மிகப்பெரிய பிராந்திய அமைப்பாகும்.

இதில் தற்போது 26 நாடுகள் அடங்கும். அதன் மொத்த பொருளாதார உற்பத்தி 30 டிரில்லியன் அமெரிக்க டாலர்களை நெருங்குகிறது.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (றீளீநு) அரச தலைவர்கள் குழுவின் 25வது உச்சி மாநாடு சீன ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்றது.

சீனாவின் தியான்ஜின் நகரில் 2025, ஆகஸ்ட் 31 முதல் செப்டம்பர் 1-ம் தேதி வரை நடைபெற்ற ஷாங்காய் (றீஜூழிஜஆஜூழிஷ்) ஒத்துழைப்பு அமைப்பின் 25-வது உச்சி மாநாடு நடைபெற்றது.

இது சீனாவின் தியான்ஜினில் உள்ள மெய்ஜியாங் மாநாட்டு மையத்தில் நடைபெற்றது. இந்த உச்சிமாநாட்டில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் உட்பட பல நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

### சீனாவின் பொருளாதார வளர்ச்சி நோக்கம்:

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் தனது உரையில், கடந்த 24 ஆண்டுகளில் இந்த அமைப்பு பல வெற்றிகளைப் பெற்றுள்ளது என்று கூறினார். மாறிவரும் உலகத்தை எதிர்கொள்ளும் வகையில் அனைத்து உறுப்பு நாடுகளும் அமைப்பின் இலக்குகளைப் பின்பற்றுவதன் முக்கியத்துவத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.


பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்வதற்காக ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மேம்பாட்டு வங்கியை விரைவில் நிறுவ வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பரஸ்பர நன்மைகள் மற்றும் பொதுவான சாதனைகள் பொதுவான அடிப்படையில், திறந்த தன்மை மற்றும் பங்கேற்பு, நியாயம் மற்றும் நீதி, நடைமுறைவாதம் மற்றும் செயல்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் கடைபிடிக்கப்பட வேண்டும் என்று அவர் மேலும் வலியுறுத்தினார்.

### இந்தியா மோடியின் தொலை நோக்கு திட்டம்:

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் வளர்ச்சிக்கான திட்டமிடல், உலகளாவிய நிர்வாக சீர்திருத்தம், தீவிரவாதத்தை எதிர்கொள்ளுதல், அமைதி மற்றும் பாதுகாப்பு, பொருளாதாரம் மற்றும் நிதிசார் ஒத்துழைப்பு மற்றும் நீடித்த வளர்ச்சிக் குறித்து இக்கூட்டத்தில் இந்திய பிரதமரால் ஆக்கப்பூர்வமாக விவாதிக்கப்பட்டது.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் கட்டமைப்பின் கீழ், ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்த இந்தியாவின்



அணுகுமுறையை பிரதமர் மோடி எடுத்துரைத்தார். இது தொடர்பாக பாதுகாப்பு, தொடர்புகள், வாய்ப்புகள் ஆகிய மூன்று அம்சங்களின் கீழ், சிறந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இந்தியா விரும்புவதாக அவர் குறிப்பிட்டார்.

வளர்ச்சி மற்றும் வளமைக்கான முக்கிய அம்சங்களாக அமைதி, பாதுகாப்பு, நிலைத்தன்மை ஆகியவற்றின் அவசியம் குறித்து வலியுறுத்திய அவர்,

தீவிரவாதத்திற்கு எதிராக உறுப்பு நாடுகள் உறுதியான மற்றும் தீர்க்கமான நடவடிக்கைககளை மேற்கொள்ள வேண்டும் என்று மோடி கேட்டுக் கொண்டார்.

தீவிரவாதச் செயல்களுக்கு நிதியுதவி அளித்தல் மற்றும் தீவிரவாதத்திற்கு எதிராக ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியம் குறித்து அவர் சுட்டிக்காட்டினார். பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு பிறகு, தீவிரவாதத்திற்கு எதிரான தங்களது வலிமையான ஆதரவை வெளிப்படுத்திய உறுப்பு நாடுகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக கூறிய பிரதமர், தீவிரவாதத்திற்கு எதிரான செயல்பாடுகளில் இரட்டை நிலைப்பாட்டைக் கடைபிடிக்கக் கூடாது என்று அவர் வலியுறுத்தினார்.

எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் நாடுகளை இதற்கு பொறுப்பேற்க வைக்க வேண்டும் என்று அவர் கூறினார்.



வளர்ச்சியை மேம்படுத்துதல் மற்றும் நம்பிக்கையை கட்டமைத்தல் ஆகியவற்றில் போக்குவரத்து இணைப்பின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்த பிரதமர், சபஹர் துறைமுகம், சர்வதேச வடக்கு – தெற்கு போக்குவரத்து வழித்தடம் போன்ற திட்டங்களுக்கு இந்தியா உறுதியுடன் ஆதரவளிப்பதாக தெரிவித்தார்.

புத்தொழில்கள், புதுமை கண்டுபிடிப்புகள், இளையோருக்கு அதிகாரமளித்தல், பகிரப்படும் பாரம்பரியம் ஆகிய துறைகளில் உள்ள வாய்ப்புகள் குறித்தும் உரையாற்றிய அவர், இவை ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் திட்டத்தின் கீழ், பின்பற்றப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

மக்களுக்கு இடையேயான தொடர்புகள், கலாச்சார புரிந்துணர்வு ஆகியவற்றின் மேம்பாட்டிற்காக இந்த அமைப்பில் நாகரீக உரையாடல் அமைப்பை தொடங்க வேண்டும் என்று பிரதமர் மோடி பரிந்துரைத்தார்.

இந்த அமைப்பின் சீர்திருத்தம் சார்ந்த திட்டங்களுக்கு பிரதமர் ஆதரவு தெரிவித்தார். இது தொடர்பாக திட்டமிட்டு நடைபெறும் குற்றம், போதைப் பொருள் கடத்தல், இணையப் பாதுகாப்பு ஆகியவற்றை எதிர்கொள்வதற்காக மையங்களை ஏற்படுத்துவது என்ற முடிவுக்கு அவர் வரவேற்பு தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு இதேபோன்ற அணுகுமுறையை கடைபிடிக்க வேண்டும் என்று அவர் அழைப்பு விடுத்தார்.

### இந்திய ரஷ்ய உறவு:

இந்தியாவுக்கு டிரம்ப் அரசு விதித்த வரிகளால் அமெரிக்க மீது கடுங்கோபத்தில் மோடியின் அரசு உள்ளது. இதனால் அமெரிக்கவுடன் வர்த்தக உறவுகளை தவிர்த்து ரஷ்யாவுடன் நல்லுறவை இந்திய அரசு கொண்டுள்ளது.

ஆனாலும் நீண்ட காலமாக இந்தியா – ரஷ்யா இடையே மிக நெருங்கிய நட்புறவு நீடிக்கிறது. இக்கட்டான காலங்களில்கூட இரு நாடுகளும் தோளோடுதோள் நின்று பயணம் செய்கின்றன. உலக நன்மை, அமைதி, வளத்துக்காக இரு நாடுகளும் இணைந்து செயல்படுகின்றன.

குறிப்பாக உக்ரைன் போர் தொடர்பாக ரஷ்யாவுடன் இந்தியா தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்திவருகிறது. ரஷ்யாவும், உக்ரைனும் பேச்சுவார்த்தை மூலம் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காண வேண்டும். உக்ரைன் போருக்கு முற்றுப்புள்ளி வைத்து நிரந்தர அமைதி திரும்ப வேண்டும் என இந்திய அரசு வலியுறுத்துகிறது.

ரஷ்ய அதிபர் புட்டின் காலத்திலும், ரஷ்யாவுக்கும் இந்தியாவுக்கும் நெருங்கிய நட்புறவு நீடிக்கிறது. அனைத்து துறைகளிலும் இரு நாடுகளும் இணைந்து செயல்படுகின்றன.

ஷாங்காயில் மாநாடு முடிவடைந்ததும், அதிபர் புட்டின் தனது சிறப்பு காரில் புறப்பட்ட போது அப்போது பிரதமர் மோடியையும் அவரது காரில் அழைத்துச் சென்றார். இரு தலைவர்களும் தங்குமிடங்களுக்கு சென்ற பிறகும் காரில் இருந்து இறங்கவில்லை. சுமார் ஒரு மணி நேரம் அதிபர் புட்டினும், பிரதமர் மோடியும் காரிலேயே தீவிர ஆலோசனை நடத்தினர்.

அமெரிக்க அரசின் வரி விதிப்பு, உக்ரைன் போர் குறித்து அவர்கள் முக்கிய பேச்சுவார்த்தை நடத்தியிருக்கக்கூடும் என்று கூறப்படுகிறது.







இந்த உச்சி மாநாட்டில் ரஷ்ய அதிபர் புட்டினும், பிரதமர் மோடியும் கைகோத்தபடி நடந்து சென்றனர். அப்போது பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் ஓரமாக நின்றிருந்தார். அவர் விரக்தியுடன் பார்க்கும் வீடியோ வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

இந்த மாநாட்டில் பாகிஸ்தான் பிரதமர் ஷெரீப், இந்தியாவை மறைமுகமாக குற்றம்சாட்டினார். ஆனால் அவரது பேச்சு கருத்தில் கொள்ளப்படவில்லை. மாநாடு முழுவதும் பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தனித்துவிடப்பட்டு, ஒருவித பரிதவிப்புடனே அவர் இருந்ததுபோன்ற சூழ்நிலை நிலவியது என சில இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்தியாவுக்கு டிரம்ப் அரசு விதித்த வரிகளால் அமெரிக்க மீது கடுங்கோபத்தில் மோடியின் அரசு உள்ளது. இதனால் அமெரிக்கவுடன் வர்த்தக உறவுகளை தவிர்த்து ரஷ்யாவுடன் நல்லுறவை இந்திய அரசு கொண்டுள்ளது. இந்த மாநாட்டுன் முடிவில் ரஷ்ய –இந்திய – சீன முத்தரப்பு கூட்டணி உருவானது, அமெரிக்காவிற்கு பெருஞ் சவாலாக எழுந்துள்ளது.

# உள்நாட்டுப் பொறிமுறைகள் மூலம் பொறுப்புக்கூறலை அடையமுடியும்

## அயலுறவுத்துறை அமைச்சர் தெரிவிப்பு

இலங்கையின் இறையாண்மைக்கு முக்கியத்துவம் அளிப்பதாகவும், சர்வதேச தலையீடுகளை நிராகரிப்பதாகவும் உள்நாட்டுப் பொறிமுறைகள் மூலம் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை அடைய முடியும் என இலங்கை நம்புவதாக அயலறவுத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

வெளித்தலையீடுகள் அதன் உள்நாட்டு நீதி மற்றும் நல்லிணக்க முயற்சிகளுக்குத் தடையாக இருக்கும் என்றும் இலங்கை மக்கள் ஒரு நியாயமான, சமமான மற்றும் வளமான சமுதாயத்தை உருவாக்க விரும்புகிறார்கள் என்றும், வெளிப்புற நடவடிக்கைகள் பிரிவினையை மட்டுமே ஏற்படுத்தும் என்றும் மேலும் தெரிவித்தார்.

60 ஆவது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை குறித்த அறிக்கை தொடர்பாக இலங்கை அரசு சார்பில் வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை ஆளும்தரப்பு கடந்த 11 மாதங்களில் அடைந்துள்ள முன்னேற்றங்கள், எதிர்காலத் திட்டங்கள் மற்றும் மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் ஊழல் ஒழிப்புக்கான உறுதிப்பாடுகள் குறித்து இந்த உரையில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

### அதில், அரசியல் மற்றும் ஆட்சிமுறை மாற்றங்கள்

* 2024 செப்டம்பர் ஜனாதிபதித் தேர்தலிலும், அதைத் தொடர்ந்து நவம்பர் மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தி கட்சிக்கு (NPP) மக்கள் அமோக ஆதரவை வழங்கினர்.

* வடக்கு, கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் உள்ள மக்கள் ஒரு கட்சிக்கு இவ்வளவு ஆதரவு வழங்கியது இலங்கையின் வரலாற்றில் இதுவே முதல்முறை.

* பல்வேறு சமூகத்தினரையும், சாதனை படைத்த எண்ணிக்கையிலான பெண்களையும் உள்ளடக்கிய இலங்கையின் வரலாற்றிலேயே மிகச் சிறந்த நாடாளுமன்றம் இது. முதன்முறையாக, மலையக சமூகத்தைச் சேர்ந்த இரண்டு பெண் உறுப்பினர்களும், ஒரு கண்பார்வையற்ற மாற்றுத்திறனாளியும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

* பல ஆண்டுகளாக ஒத்திவைக்கப்பட்டிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. எந்தவித வன்முறைச் சம்பவங்களும், அரச வளங்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்ட நிகழ்வுகளும் இல்லாமல் தேர்தல்கள் சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடைபெற்றன.

### பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றங்கள்

* ஆளும்தரப்பு பொறுப்பேற்றபோது நாடு எதிர்கொண்டிருந்த பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க முன்னுரிமை அளித்து, சமூக பாதுகாப்பு மற்றும் நலத்திட்டங்கள் மூலம் பொருளாதார சவால்கள் குறைக்கப்பட்டன.

* விவசாயம், மீன்பிடி உள்ளிட்ட பாதிக்கப்படக்கூடிய துறைகளுக்கு சிறப்பு நிவாரணங்கள் வழங்கப்பட்டன.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளுக்கு வரலாற்றுபூர்வமான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

* வறுமையில் வாடுவோர், பெண்கள், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள் போன்ற பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குவதற்காக சமூக நலன்புரி நிதி அதிகரிக்கப்பட்டது.

* மீள்குடியேற்ற தேவைகளைப் பூர்த்தி செய்யவும், வீட்டுத் திட்டங்களை விரைவுபடுத்தவும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கவும் ரூ. 1500 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள்

* பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்குப் பதிலாக புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை உருவாக்குவதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்த சட்டமூலம் இந்த மாதமே வர்த்தமானியில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

* இணையவழி பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

* காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் (OMP), இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் (ONUR) போன்ற உள்நாட்டு நல்லிணக்க பொறிமுறைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

* காணாமல்போனோர் தொடர்பான விசாரணைகளை விரைவுபடுத்த காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்திற்கு (OMP) ரூ. 375 மில்லியன் மேலதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

* உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

* செம்மணி புதைகுழி உட்பட பல்வேறு புதைகுழிகள் குறித்து சுதந்திரமான விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

* பொலிஸ் துறையின் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டு, ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் போன்ற பல நீண்டகால வழக்குகள் மீண்டும் விசாரிக்கப்படுகின்றன.

*பெரும்பாலான தனியார் காணிகள் உரிமையாளர்களிடம் விடுவிக்கப்பட்டுள்ளன. தேசிய பாதுகாப்பிற்கு அத்தியாவசியமான காணிகள் மட்டுமே அரசு கட்டுப்பாட்டில் வைக்கப்படும், அதற்கான உரிய இழப்பீடு வழங்கப்படும்.

* மோதல்களில் உயிரிழந்தோரை நினைவு கூரும் உரிமைக்கு அரசு அனுமதி அளித்துள்ளது, இதனால் இந்த ஆண்டு பல இடங்களில் நினைவு நிகழ்வுகள் சுதந்திரமாக நடத்தப்பட்டன.

* சிவில் சமூக அமைப்புகளுக்கு சுதந்திரமாக செயல்பட ஏற்ற சூழல் உருவாக்கப்பட்டுள்ளது.

### ஊழல் ஒழிப்பு மற்றும் சீர்திருத்தங்கள்

* கடந்த சில மாதங்களில், ஊழல் ஒழிப்புக்கு வலுவான புதிய சட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. சமூக நிலை எதுவாக இருந்தாலும், அரசியல் தலையீடு இல்லாமல், குற்றச்சாட்டுகள் குறித்த சுதந்திரமான விசாரணைகள் மற்றும் வழக்குகள் தொடரப்பட்டு பல முக்கிய தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

* இந்த ஆண்டின் தொடக்கத்தில், புதிய அரசியல் கலாசாரம் மற்றும் நெறிமுறை சார்ந்த நல்லாட்சியை ஊக்குவிக்கும் நோக்கில் 'தூய இலங்கை' என்ற நிகழ்ச்சித்திட்டம் ஜனாதிபதியால் ஆரம்பிக்கப்பட்டது.

* ஊழலற்ற இலங்கை ஒவ்வொரு குடிமகனின் கண்ணியத்திற்கும், நலனுக்கும் இன்றியமையாதது என ஆளும்தரப்பு உறுதியாக நம்புகிறது.

அத்துடன் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உறுப்பினர்கள், பார்வையாளர்கள் மற்றும் அனைத்து பங்குதாரர்களும் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து செயல்பட வேண்டும் என்றும், அதன் முயற்சிகளைப் புரிந்து கொண்டு ஆதரவு வழங்க வேண்டும் என்றும் இலங்கை கேட்டுக்கொண்டுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாற்றங்களைப் பயன்படுத்திக்கொண்டு, உள்நாட்டுப் பொறிமுறைகள் மூலம் அனைத்து இலங்கை மக்களின் உரிமைகளையும் மேம்படுத்த வேண்டும் என்று ஆளும்தரப்பு வலியுறுத்தியுள்ளது.

இலங்கையின் இறையாண்மைக்கு முக்கியத்துவம் அளிப்பதையும், வெளிநாட்டுத் தலையீடுகளை நிராகரிப்பதையும், உள்நாட்டுப் பொறிமுறைகள் மூலம் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை அடைய முடியும் என இலங்கை நம்புகின்றது.

மேற்குறிப்பிடப்பட்ட முக்கிய விடயங்கள் விஜித்த ஹேரத் தனது உரையில் குறிப்பிடப்பட்டுள்ளார்.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.09.2025இல் வெளியிடப்பெற்றது